


# சுகவாரியும் பேரின்ப ஊற்றும்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

பக்தியில் திளைத்து, உலக வாழ்வின் இன்பங்களில் பற்றை விடுத்து, பக்திப் பரவசம் மேலோங்க, ஞானத்தின் உச்சியில் சென்று. ஆனந்த நிலையை எய்திய ஞானிகளில் பலர், தங்களது இறையனுபவத்தைப் பாடல்கள் வாயிலாக வெளிப்படுத்தினர்.

அப்பாடல்கள் நமக்கு இன்றும், என்றும் வாழ்வியல் நற்சிந்தனைகளை வழங்குகின்றன.

இறையனுவத்தை- தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும்- அவரவர்கள் பாணியில் விளக்ககுகின்றனர்.

சுகவாரி எனற் தலைப்பில் தாயுமானவர் பாடியிருக்க, வள்ளலார் ”இறைவனை ஏத்தும் இன்பம்” என்ற தலைப்புகளில் பாடி மகிழ்ந்துள்ளார். பேரின்ப ஊற்று என்ற தலைப்பில் வேதாத்திரியாரும் பாடியிருக்கிறார்.

## மாணிக்கவாசகரது **பேரின்பத்தின் பரவசநிலை**

இறையனுபவம் திருவாசகத்தில் பல இடங்களில் கூறப்பட்டிருந்தாலும், அதன் திருவண்டப்பகுதியில்

“அறிவதற்கு அரிய இறைவன், உள்ளங்கை நெல்லிக்கனி போல எனக்கு எளியவன் ஆனான்; என் இறையனுபவத்தைச் சொல்லால் விளக்கமுடியாமல் தவிக்கிறேன்;

இறைவா நீ வாழ்க! முதலமைச்சராக வந்த என்னை, நீ இவ்விதம் பேரின்ப வெள்ளத்தில் இருக்கச் செய்ததை இன்னது என்றும் நான் அறியேன்!

நாயேனாகிய நான் இவ்வின்பத்துக்குத் தகுதி உடையவன் அல்லேன்; இறையின்பத்தால், ‘நான்’, ‘எனது’ என்னும் பேதங்கள் செத்து ஒழிந்தன!

ஒன்றுக்கும் அற்ற அடியேனுக்கு இறைவன் அருளியது எதற்காக என்று அறியேன்! இறையின்பத்தை எவ்வளவுதான் பருகினாலும், விழுங்கினாலும், ஆரா வேட்கையுடன் பொறுக்க மாட்டாமல் உள்ளேன்!” என்று பேரின்பப் பரவசத்தின் நிலையை நமக்குக் காட்டுகிறார் பெருமான்.

*தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்;*

*சொல்லுவது அறியேன்! வாழி! முறையோ!*

*தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது*

*தெரியேன்! ஆஆ செத்தேன்! அடியேற்கு*

*அருளியது அறியேன்! பருகியும் ஆரேன்!*

*விழுங்கியும் ஒல்ல கில்லேன்!* (அண்டப்பகுதி: 162-167)



”வாரி” என்றால்மழை. ”சுகவாரி” என்றால் சுகமான மழை அதாவது இங்கு அருள் மழை என்ற பொருள்படும்.

சுகவாரி தலைப்பில் 12 பாடல்களை 192 வரிகளில் தாயமானவர் பாடியுள்ளார்.

பேரின்ப ஊற்று என்ற தலைப்பில் பத்து பாடல்களை நாற்பது வரிகளில் வேதாத்திரி மகரிசி பாடியுள்ளார்கள்.

தாங்கள் அடைந்த பேரின்பத்தை- மானுடத்திற்கு மெய்ஞ்ஞான பார்வையில் தாயுமானவரும், மெய்ஞ்ஞான விஞ்ஞானப் பார்வையுடன்- வேதாத்திரி மகரிசியும் மொழிகின்றனர்.

தாயுமானவரது இறையனுபவம் பல இடங்களில் கூறப்பட்டிருந்தாலும், அதன் சுகவாரி என்ற தலைப்பில் பத்துப்பாடல்களில் சிறப்பா கூறப்பட்டுள்ளது.

உயிர்கள் நிலைபெற்றிருப்பதற்கு நீர் முற்றிலும் இன்றிய மையாதது.

"நீர் இன்றி அமையாது உலகம்" என்பது வள்ளுவர் வாய்மொழி. வாரி என்ற சொல் நீரைக் குறிக்கின்றது.

நீருடன் ஒப்பிட்டுப் பரம்பொருள் 'சுகவாரி என்று வழங்கப் பெறுகின்றது. இன்பமனைத்துக்கும் அதுவே இருப்பிடமா தலால் இச்சொல் அதற்கு மிகவும் பொருத்தமானது.

நீரை வாயால் அருந்துகின்றோம். அருந்துதல் என்ற செயலை வைத்துக் கொண்டு பரம்பொருளினிடத்து நாம் பெறுகின்ற பேரானந்தத்தை அறியலாம்.

இதை தாயுமானவர் 'சுகவாரி தன் னிலே வாய்மடுத்து உண்டு” என்று இயம்புகின்றார்.

நாம் அன்றாடம் உண்ணும் உணவும் பருகும்நீரும் நம்மிடத்துச் சீவபோதத்தை வளர்க்கின்றன.

உடல் அபிமானத்தைக் காக்கவே நாம் இவற்றை ஏற்கின்றோம். இந்த உணவு நம் உடலைப் பேணுவது போன்று பரிபூரணத்தைப் பற்றிய உணர்வு பரிபூர்ணத்தின்கண் நம்மை எடுத்துச் செல் லுகின்றது.

தன்னிடத்துள்ள குறைகளை நீக்குவதற்கென்றே சீவன் பல பிறவிகளை எடுக்கின்றான்.

குறைகளை அகற்று கின்ற அளவு புதிய குறைகளும் தோன்றிக் கொண்டே வருகின்றன.



கடலில் அலைகட்குப் பிறகு அலைகள் வருவன போன்று மனிதன் வாழ்ந்திருக்கும்வரை குறைகளும் தோன்றிக் கொண்டே வருகின்றன.

உடலுக்கு வேண்டிய உணவை உண்டு கொண்டிருப்பதற்கிடையில் பசி மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருப்பது போன்று குறைபாடுகளும் தோன்றிக் கொண்டே உள்ளன.

'பரிபூரணம்' என்னும் பரமார்த்திக நீரை அருந்தியவுடன் அது பேரானந்தத்தில் மனித னைக் கொண்டு சேர்க்கின்றது.

ஆதலால்தான் அது 'சுகவாரி' எனப்படுகின்றது. அதனை அருந்தியவுடன் மனிதன் தன் வசம் இழந்து பரவசம் அடைகின்றான்.

பேறு அனைத்தும் அதில் அடங்கி விடுகின்றது. சுகவாரி தன்னிலே வாய்மடுத்து உண்டு அவசமாய் என்று இந்நிலையை தாயுமானவர் விளக்குகின்றார்.

## 1. இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா!

இன்ப ஊற்று உள்ளத்தில் எப்போது ஊறத்தொடங்கும்?

"நீ எங்கு எவ்விடத்தில் இருக்கிறாய் என்று கணித்துக் கொள்ள வேண்டும். அதாவது வயதிலே வாழ்விலே, கல்வியிலே, செயல் திறமையிலே, அறிவின் நுட்பத்திலே பொருள் வளத்திலே, அதிகாரத்திலே. எந்த நிலையிலே நீ இருக்கிறாய் என்று கணித்துக் கொள்.

இவற்றைக் கொண்டு உனக்கு, குடும்பத்துக்கு. சுற்றத்தாருக்கு, ஊருக்கு, உலகுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்று கணித்துக் கொள், முடிந்த அளவிலலே செய்து கொண்டிரு.

இந்தத் தொண்டினை ஆற்றுவதற்கு என் திறமையை எந்தெந்த முறையில் வளர்த்துக் கொள்ள முடியுமென்று திட்டமிட்டு முறைான பயிற்சியின் மூலம் வளர்த்துக்கொள்.

இங்கே ஒரு பெரிய இன்ப ஊற்று உள்ளத்திலே ஊறத் தொடங்கி விடும்."என்கிறார் வேதாத்திரி மகரிசி.

தாயுமானவர் பாடுகிறார்.....

இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்
எனருசித் திடவலியவந்து
இன்பம் கொடுத்த நினை எந்நேரம் நின் அன்பர்
இடையறாது உருகிநாடி,

உன்னிய கருத்து அவிழ உரைகுளறி, உடல் எங்கும்
ஓய்ந்து அயர்ந்து அவசமாகி
உணர்வு அரிய பேரின்ப அநுபூதி உணர்விலே
உணர்வார்கள் உள்ளபடிகாண்.

கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பு என்னினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்,

கணவன் அருள் பெறின்முனே சொன்னவாறு என்னனக்
கருதிநகை யாவள் அதுபோல்

சொன்னபடி கேட்கும் இப் பேதைக்கு நின்கருணை
தோற்றின் சுகாரம்பமாம்.
சுத்தநீர்க் குணமான பர தெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே. (தா.பா.77. சுகவாரி பா.1)

தூய. முக்கண வசப்படாத மேலான தெய்வமே பேராளிப் பிழம்பே! இன்பக்கடலே!

இனிய அமுதம், கனி ,சர்க்கரைப் பாகு, கற்கண்டு, சீனி, தேன் என்னும் இவைபோல சுவைக்குமாறு வலியவந்து, இன்பம் கொடுத்த நின்னை,

எப்பொழுதும் நினது அடியார்கள் இடைவிடாது உள்ளம் உருகி, மனவேகம் குறைய,

உரைகுழறி, உடல் ஒய்ந்த, பரவசமாகி, உணர்வதற்கு அருமை உடைய பேரின்ப அனுபவத்தைப் பெற்று, உள்ளது உள்ளபடி உணர்விலே உணர்வார்கள்.



கன்னிப்பெண் ஒருத்தி, சிற்றின்பத்தை வேம்புபோல் சகப்பானது என நினைத்திருந்தும், மங்கைப் பருவம் வந்தவுடன், கணவனுடன் கூடி இன்பந் துய்த்த பிறகு, முன்னம் அதனை பழித்துரைத்ததை நினைந்து நகை செய்வாள்.

அதுபோல போகி, யோகியரின் மற்றும் யோகத்தின் அருமை தெரிந்த பின், இவ்வழிக்கு வர முயற்சி செய்கிறான். மீண்டு வரவும் அவனுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

இதைத்தான், "அதுபோல சொன்னபடி கேட்டு நடக்கும் இப்போதைக்கு நின் கருணை தோற்றின் சுகாரம்பமாம்" என்று அழகாக முடிக்கிறார் தாயுமானவர்.

பேரின்பம் எப்படி இருக்கும் தெரியமா? வேதாத்திரியார் பேரின்பக் களிப்பில் பாடுகிறார்.

இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - எங்கும்
இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!
அன்பு ஊற்றாய்ப் பெருகி அனைத்துயிர்க்குள்ளும் அறிவாய்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா (ஞா.க.பா.1648-1)

அதைவிடப் பெரிய இன்பம் இல்லை என்பதைக் குறிக்க பேரின்பம் என்கிறோம்.

ஊற்று என்பது கறைவில்லாமல் தொடர்ந்து வந்து




கொண்டேயிருப்பது. இன்பமானது நீடித்தும் நிலைத்தும் இருப்பது ஆகும். இன்பமும் துன்பமும் இல்லாத நிலையே அமைதி.

மன அலைகச் சுழலானது குறைந்து அறிவு என்ற நிலைக்குப் புகும்போது, தன்னையே எல்லாவற்றிலும் எல்லாவற்றையும்

தனக்குள்ளேயும் காண்கின்ற அகத்துணர்வு ஏற்படும். அதுவே பேரின்பம், பேரானந்த நிலையாகும்.

## 2.பேரின்பத்தை அடியேன் எவ்வாறு பெறமுடியும்?

நிலைத்தும் நீடித்தும், சலிப்பில்லாமலும் உள்ள அமைதியே பேரின்பம் என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிசி.

தாயுமானவர் பாடுகிறார்.....

அன்பின்வழி அறியாத என்னைத் தொடர்ந்து என்னை,
அறியாத பக்குவத்தே

ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்து, நான்
அற்றேன் அலந்தேன் என

என்புலன் மயங்கவே பித்தேற்றி விட்டாய்.
இரங்கிஒரு வழியாயினும்
இன்ப வெள்ளம் ஆகவந்து உள்ளம் களிக்கவே
எனைநீ கலந்தது உண்டோ?

தன்பருவ மலருக்கு மணம் உண்டு வண்டு உண்டு
தண்முகை தனக்கும் உண்டோ?
தமியனேற்கு இவ்வணம் திருவுளம் இரங்காத
தன்மையால் தனியிருந்து

துன்பம் உறின் எங்ஙனே அழியாத நின் அன்பர்
சுகம்வந்து வாய்க்கும்உரையாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே. (தா.பா.778. சுகவாரி பா.2)

அன்பு நெறியினை அறியாத என்னை. அறியாத பருவத்திலே பின்தொடர்ந்து வந்து, ஆசை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுமாறு செய்து,

"கெட்டேன் வாடினேன்" என அறிவு மயங்கி. பித்து ஏறுமாற செய்துவிட்டாய்.



ஒருமுறையேனும் மனம் இரங்கி, இன்ப வெள்ளமாகப் புறப்பட்டு வந்து, உள்ளம் மகிழுமாறு என்னை நீ புணர்ந்தது உண்டோ?"

நன்றாக மலர்ந்த மலருக்கு மணம் உண்டு. அதனை நாடி வரும் வண்டும் உண்டு. குளிர்ந்த முதிர்ந்த மொக்குக்கு

மணம் உண்டோ? நாடிவரும் வண்டு உண்டோ?

மலர்கள் மலர்வதற்கு முன், மொக்குகளாக இருக்கம் பொழுது, வண்டுகள் வருவதில்லை. அதையும் நாம் காண வேண்டும்.

மலர்கள் மலர்கின்ற காலத்தையாவது அடிமானமாக சொல்லிவிடலாம். ஆனால், ஆத்ம சாதகன். எப்பொழுது இறைத் தன்மை அடைவான் என்று யாரும் சொல்ல முடியாது.

ஆனால், படிப்படியாக அவன் ஞானம் அடைவதற்கான அறி குறிகள் ஆரம்பிக்கின்றன. படிப்படியாக அவன் பரிபக்குவமும், முன்னேற்றமும் அடைகிறான்.

ஒரு அமைச்சர் , ஓர் இடத்துக்கு வரும் முன்னர் எவ்வளவு ஏற்பாடுகள் செய்கின்றனர்.

ரோடு போடுகிறார்கள். சத்தம் செய்கிறார்கள். அலங்காரம், மேடை என்று எவ்வளவு முன்னேற்பாடுகள்.

அதுபோல, ஞானம் அடைதவற்கோ. இறைவன் உள்ளத்தில் எழுந்தருள்வதற்கு முன்னர் எவ்வளவு அழுக்குகளை உள்ளத்திலிருந்து நீக்க வேண்டி உள்ளது?

என்ன என்ன அழுக்குகள்........ சிந்தித்துப் பாருங்கள்....

காமம், கோபம், பொறாமை, சுயநலம், பேராசை, சினம், கடும்பற்று, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம்–எவ்வளவு அழுக்குகள்?

இந்த அழுக்குகளை நீக்காமல் ஞானம் வருமோ? வரவே வராது. சுத்தமான உள்ளத்தில் பக்குவம் பிறக்கிறது. ஞானம் வருகிறது. இறைவன் குடியேறுகிறான்.

சூரிய உதயத்தைப் பாரங்களேன். சூரியன் உதிக்கும் முன் கிழக்கு வெளுக்கிறது. பிறகு செவ்வானம் உண்டாகிது. பிறகுதான் சூரியன் வருகிறான்.

இதுபோல்தான், பரம் பொருளும், தாம் வருவதற்கு முன்னர் படிப்படியாக அரவது அருள் வருகிறது.

எல்.கே.ஜி. யிலிருநது படிப்படியாகப் படிப்பது போல் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இதைத்தான்--- தாயமானவர், தன் பருவ மலருக்கு தனியிலிருந்து துன்ப முறீல்" என்கிறார்.

"வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்பார் மாணிக்கவாசகர். இதுபோல்தான் கேட்கிறார் தாயமானவரும்.

தனியனாகிய என்மீது இப்படித் திருவள்ளம் வைக்காத தன்மையால், தனிதிருந்து துன்பம் அடைகிறேன்.

அப்படி இருக்க, நினது மெய்யன்பர் பெறும் அழியாத பேரின்பத்தை அடியேன் எவ்வாறு பெறமுடியும், எடுத்துக் கூறுவாயாக எனக் கேட்கிறார் தாயுமானவர்.!

அறிவாய் இருக்கும அறிவாய் இயங்கும் பாரபரத்தை பற்றினால் பேரின்பத்தை அடையலாம் என்கிறார் வேதாத்திரியார்.

எழிலுலகம் படைத்து எல்லா உயிர்களுக்கும்
வழிவழியாக வாழ வாய்ப்பை நிரப்பி வைத்து
ஒழிவிலாத் தொடராக உள்ளும் புறமும் ஊற்றாய்
அழிவிலாப் பேரின்ப அறிவலையாய்த் திகழும், (ஞா.க.பா.1646-2)

இன்ப ஊற்றாக எங்குமே நிறைந்த இறைநிலை, அனைத்து சீவ இனங்களிலும் அன்பும கருணையும் வெளிப்படுத்தும் அறிவாக இயங்குகிறது.

பரம் என்றால் அதைவிடப் பெரிதும் நுண்ணியதும் இல்லை. இணையானதுமில்லை என்பதாகும். அதனையே பேரறிவு என்கிறோம்.

## 3.என் மனம் ஒருபோதும் உருகவில்லையே!

நாம் விரும்பும் முறையிலே நம்முடைய மனதை இயக்கப் பழகிக் கொண்டால் என்ன நினைக்கின்றோமோ அந்த நினைவிற்கேற்றவாறு மன அலைச்சுழல் ஒடுங்கிவிடும். தாயுமானவர் பாடுகிறார்.....

கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும் என்
கல்நெஞ்சம் உருகஇலையே.

கருணைக்கு இணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்கஒருகடவுளோ?

வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு
வழக்குக்கு இழுக்கும் உண்டோ?
வானமாய் நின்று இன்ப மழையாய் இறங்கிஎனை
வாழ்விப்பது உன்பரங்காண்.

பொல்லாத சேய் எனில் தாய்தள்ளல் நீதமோ?
புகலிடம் பிறிதும் உண்டோ?
பொய்வார்த்தை சொல்லிலோ திருஅருட்கு அயலுமாய்ப்
புன்மையேன் ஆவன், அந்தோ

சொல்லால் முழக்கிலோ சுகம் இல்லை, மௌனியாய்ச்
சும்மா இருக்கஅருளாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. (தா.பா.79. சுகவாரி பா.3)

ஐயனே! கல்கூட ஒரு காலத்தில் உருகினாலும் உருகும். ஆனால் என் மனம் ஒருபோதும் உருகல்லையே!



திருவருளுக்குக் கட்டுப்படாத, உலகப்பற்றைக் கற்பித்துப் படைக்கும் நான்முகனும் ஒரு கடவுளா?

வல்லான் வகுத்ததே வாய்க்கால் என வழங்கும் ஒரு வழக்கிற்கு ஏதும் குற்றம் உண்டோ?

வெளியாய் நின்று, இன்ப மழையாய்ப் பொழிந்து என்னை

வாழ வைப்பது உன்னுடைய கடமை என்பதை நீ அறிவாய்!

தான் பெற்ற பிள்ளையில் ஒரு பிள்ளையை பொல்லாத பிள்ளை என்ற  கூறித் தாயே தள்ளி வைப்பது நீதியாகுமோ?

அப்பிள்ளைக்குத தாயை விட்டால் வேறு புகலிடம் உண்டோ?

விவிலியத்தில் ஒரு கதை உண்டு? இங்கு இந்தக் கதை பொருத்தமைாக உள்ளது.

ஒருவருடைய இளைய மகன்கெட்டு, குட்டிச் சுவராக, சொத்துக்களை இழந்துவிட்டுப் பிச்சைக்காரனாக வரகிறார்.

எப்படி? திருந்தி வருகிறான்.

தந்தை அவனை வரவேற்கிறார். மூத்த மகனுக்கோ கோபம்.

தந்தை சொல்கிறார். "தவறு செய்து விட்டுத் திருத்தியவனைக் கை விடக் கூடாது"

ஜென்னில் கூட ஒரு கதை உண்டு......

ஒரு கெட்ட குணம் கொண்ட மாணவனை, மற்ற நல்ல மாணவர்கள் விரட்ட நினைக்கும் பொழுது, குரு சொல்கிறார்.

"நீங்கள் எல்லோரும் போனாலும் பரவாயில்லை. இவன்தான் என்னுடைய முதல் மாணவன். நீங்கள் நல்லவர்கள். உங்களிடம் எனக்கு வேலை இல்லை. ஆனால், இவைத் திருத்த வேண்டும்" என்றாராம்."

எனவே, ஆன்மீகவாதிகளை விட, அதில் நம்பிக்கை இல்லாதவர்களைத்தான் நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டும். பண்படுத்த வேண்டும்.

இறைநிலையான கடவுளும் அப்படித்தான்.

இதைத்தான், "பொல்லாத சேயெனில்...புகலிடம் பிறிதும் உண்டோ? என்கிறார் தாயுமானவர்.

மேலும் பொய்வார்த்தை ...அந்தோ என்று பணிது விட்டால், மன்னிப்பவர் இறைவன் என்கிறார். இன்னும் முடியவில்லை.

மக்கள் உரையாட எராளமான சொற்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்தாம் எல்லோரும்.

இராமலிங்க வள்ளலார் சொல்வாரே அதுதான். எனவே, இச்சமயத்தில மௌனத்தின் மகிமை நமக்குப் புரிகிறது.

அருணகிரிநாதரிடம் முருகன், "சும்மா அற" என்று தானே சொன்னார்.

இரமணரும் மௌன விரும்பிதான். பால்பிரண்டன் என்ற ஆங்கிலேயர் இரமண மகரிசியின் மௌனத்தாலேயே கவரப்பட்டவர் தானே!

தாயுமானவரின் குருவான மௌன குருவும் அப்படியே "சும்மா இரு" என்று இவரைச் சொன்னார்.

ஒரு சாமியார் ஒரு கோயிலில் இருந்து கொண்டிருந்தார். உண்டைக் கட்டியும் (உணவு) அவருக்குக் கோயில் கணக்கிலிருந்தே கொடுப்பார்கள்.

இதைக்கண்ட புதிதாக வந்த அலுவலர், "சும்மா இருப்பவர்க்கு எதுக்கு உணவு? " என்று உண்டைக் கட்டியினை நிறுத்திவிட்டார்.

துறவியும் அந்த அலுவலரிடம் "நீங்கள் அரை மணி நேரம் சும்மா இருந்து பாருங்களேன்" என்ற சொல்ல, அந்த அலுவரால் ஐந்து நிமிடம் உடலையோ, உள்ளத்தையே அடக்க இயலவில்லை.

ஆம்...சும்மா இருத்தல் எளிதன்று. தட்சிணாமூர்த்தியின் உபதேசம் மௌனம்தானே!

இதைத்தான் தாAமானவர், "சொல்லால் முழுக்கிலோ சுகமில்லை என்றும் மௌனியாய்ச் சும்மா இருக்க அருளாய்" என்றும் கேட்கிறார் இறைவனை நோக்கி.

அவன் பரஞ்சோதி, சோதிகளுக்கெல்லாம் சோதி அவன், சூரியன், சந்திரன் இவற்றைவிட ஒளி ஆனவன்.

”அருட்பெரும் ஜோதி” என்பார் வள்ளலார்.


”ஜோதியே தீச்சுடரே” என்பார் மாணிக்கவாசகர்.

”பிரம்ம ஜோதி” என்பார் கச்சியப்பர்.

”இறைவனை வாயால் பேசிப் புரிய வைத்துவிட முடியாது.அனுபவமே அவனை அறிய உதவும்…உணர உதவும்” என்று அழகாக முடிக்கிறார் இப்பாடலை தாயுமானவர்.

ஆதிநிலை வெளியில், அறிவும் விரைவுமாக
அடங்கியுள்ள தன்மையே அணுமுதல் அனைத்துக்குள்ளும் நீதி ஒழுங்கமைப்பாய், நேர்முகக் காட்சிகளாய்,
நீதி ஒழுங்கமைப்பாய், நேர்முகக் காட்சிகளாய்,
நிறைந்த திருவருளை நினைக்க நினைக்க என்னுள் (ஞா.க.பா.1648-3)

ஆதி, அனாதி, சத்தவெளி எனப்படும் இறைநிலையானது இயக்க



ஒழுங்கோடு தோற்றங்களாகி, அனைத்திற்குள்ளும் வேகமாகவும், விவேகமாகவும் இருந்து, நியதி தவறாமல் இயக்கியும், காத்தும் முடித்தும் வைக்கிறது என்பதை நேரடிக் காட்சியாக அகத்துணர்வாக உணர்ந்தேன்.

அந்தக் காட்சியை எண்ணுகிறபோது, எனக்குள்ளும் புறமுமாக அன்பு ஊற்றாக இன்ப ஊற்றாக இறைநிலையை உணர்கிறேன் என்று பாடுகிறார் வேதாத்திரியார்.

## 4. ஆனந்த மழைபொழிவு

”உலக உயிர்கள் அனைத்தும் இன்பமாக வாழ்தல் வேண்டும். அதைத் தவிர வேறொன்றும் அறியேன்” என்கிறார் தாயுமானவர்.

தன்னலமற்ற பொதுநலத் தன்மையினை இவ்வரிகள் காட்டுகின்றன.

எல்லாரும் ஆனந்தமாக வாழவேண்டும் என்று தாயுமானவர் விரும்பினார். விரும்பியதை ஆனந்த களிப்பாக்கினார்.

யாருக்குத்தான் ஆனந்தமாய் வாழ ஆசை இருக்காது? ஆனால் எப்படி ஆனந்தமாய் வாழ்வது என்பது தான் தெரிய வில்லை.

என்பு எலாம் நெக்கு உடைய, ரோமம் சிலிர்ப்ப, உடல்
இளக, மனது அழலின் மெழுகாய்
இடையறாது உருக, வரு மழைபோல் இரங்கியே
இருவிழிகள் நீர்இறைப்ப,

அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அங்ஙனே
அமிர்தசஞ் சீவிபோல்வந்து
ஆனந்த மழைபொழிவை. உள் அன்பு இலாதஎனை
யார்க்காக அடிமைகொண்டாய்.

புன்புலால் மயிர்தோல் நரம்பு என்பு மொய்த்திடு
புலைக்குடிலில் அருவருப்புப்
பொய் அல்லவே, இதனை மெய் என்று நம்பிஎன்
புந்திசெலு மோபாழிலே?

துன்பமாய் அலையவோ? உலகநடை ஐய ஒரு
சொப்பனத் தினும் வேண்டிலேன்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. (தா.பா.80. சுகவாரி பா.4)

எலும்பு எலாம் நெகிழ்ந்து உருகவும், மயிர் சிலிர்ப்பவும், உடல் இளக்கம் கொள்ளவும், மனம் அனலில்பட்ட மெழகுபோல் இடைவிடாது உருகவும்,

மழைபோல் இரக்கம் காட்டி, இரு விழிகளிலும் நீரைப்பொழிய, அன்பு மிகுதியாய் மூர்ச்சையான மெய்யன்பருக்கு உயிர் காக்கும் மருந்துபோல் வந்து, பேரின்ப மழையைப் பொழிவாய்!

மனம் காலியாகியபின் நடப்பது என்ன? எது நிரம்பகிறது.



அதில் "அமிர்த சஞ்சீவி போல் ஆனந்த மழை நிரம்புகிறதாம்" என்கிறார் தாயமானவர்.

மழை, உணவை உற்பத்திச் செய்ய அமிர்த சஞ்சீவியாக உள்ளது. இது போல் ஆன்மீக சாதகனுக்கும் அருள்மழை பொழிய ஆரம்பிக்க. அவன் உயர்வது நிச்சயமாகி விடுகிறது

உலகிடம்அன்பு வைப்பதா? கடவுளிடம் அன்பு வைப்பதா? யாரிடம் அன்பு வைப்பது?

இதைத்தான் தாயுமானவர் "உள்ளன்பிலாத எனை நீ யாருக்காக அடிமை கொண்டாய்" என்கிறார்.

அடுத்து சேரிடம் அறிந்து சேர வேண்டும்.

ஒரு சமயம் தருமருக்கு துரியோதனனுடன் சேர்ந்து வெளியே சென்ற பொழுது, அவனது துர்புத்தி அவருக்கும் வந்ததாம்

இழிந்த ஊன், மயிர், தோல், நரம்பு, எலும்பு என இவற்றால் ஆன, சிறுகுடிசை போன்ற புலால் உடல், அருவருப்புடையது என்பது பொய் அல்லவே!

இதனை உண்மை என்று நம்பி, என் பத்தி வீணே இதன்பின் செல்லுமோ? சென்று துன்புற்ற அலைந்து திரியுமோ?

ஐயனே! இந்த நிலையில்லாத உலக வாழ்வை கனவிலும வேண்டேன்...என்கிறார் தாயுமானவர்

உடலும்- நிலையாமை தத்துவத்தில்அடங்கியுள்ளது. உலகமும்- நிலையாமை தத்துவத்தில் அடங்கியுள்ளது. இதனை பேரின்பக் களிப்பில் பாடுகிறார் வேதாத்திரியார்.

உடலாய் எனை நினைந்தேன் உணர்ச்சிகள் வருந்தின
உடலுள் உயிராய் என்னை உயர்ந்து அறிவில் நிறைந்தேன்
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள்நான் அடங்க(ஞா.க.பா.1646-4)

அழிந்து போகக்கூடிய உடலையே நான் என்று கருதியபோது உணர்ச்சிவயப்பட்ட நிலையில துன்புற்றேன்.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு. அந்த அறிவே நானாகவும், நீயாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

## 5. தாயுமானவரின் நம்பிக்கை

நம்பிக்கையே வாழ்க்கை. நம்பிக்கையே மனிதனை உயிருடன் வைத்திருக்கிறது.

நம்பிக்கை மிக உயரிய பொருள். அது இல்லாவிட்டால், நம் நிலை மோசமாக இருக்கும். நம்பிக்கை என்பதே வாழ்க்கை. வாழ்க்கை என்பதே நம்பிக்கை.

வெந்நீர் பொறாது என்உடல் காலில் முள் தைக்கவும்
வெடுக்கென்று அசைத்து எடுத்தால்
விழிஇமைத்து அங்ஙனே தண்ணருளை நாடுவேன்.
வறு ஒன்றை ஒருவர்கொல்லின்

அந்நேரம் ஐயோஎன் முகம்வாடி நிற்பதுவும்
ஐயநின் அருள் அறியுமே.
ஆனாலும் மெத்தப் பயந்தவன் யான்என்னை
ஆண்டநீ கைவிடாதே.

இந்நேரம் என்றுஇலை உடற்சுமை அது ஆகவும்
எடுத்தா இறக்கஎன்றே

எங்கு எங்கும் ஒருதீர்வை ஆயம் உண் டு ஆயினும்
இறைஞ்சு சுகர் ஆதியான

தொல்நீர்மை யாளர்க்கு மானுடம் வகுத்தஅருள்
துணைஎன்று நம்புகின்றேன்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மே பரம்
சோதியே சுகவாரியே. (தா.பா.81. சுகவாரி பா.5)

எனது உடம்பு வெந்நீரின் சூட்டைக்கூட பொறுத்துக் கொள்ளாது. காலில் குத்திய முள்ளை, வெடுக்கென்று விரைந்து அசைத்துப் பிடுங்கும்போது, கண்ணை மூடி அப்படியே திருவருளை நாடி நிற்பேன்.

வேறொரு உயிரை வேறொருவர் கொன்றால், அப்பொழுது அந்தோ என் முகம் வாடி நிற்பேன்.



அதனை ஐயனே! நினது திருவருள் அறியுமோ! எப்படியாயினும் அடியேன் மிகவும் பயந்த சுபாவம் உடையவன். எனவே என்னை ஆட்கொண்ட நீ, இடையில் கைவிட்டு விடாதே!

இந்த உடல் எந்த நேரத்தில் விழும் என்று சொல்ல முடியாது. "பிறந்த உடல் இறக்கும், என்ற ஒரு தீர்ப்பு வழக்கில் உண்டு.

இருப்பினும் உன்னையே வணங்கும் சுகர் முதலிய கணவான்களுக்கு மனித உடலை வகுத்தளித்து, அதற்குத் திருவருள் துணை நிற்பதையும் அறிவேன். அவ்வருளே எனக்கும் துணை என்று நம்புகிறேன்.

தாயுமானவரின் நம்பிக்கையை வேதாத்திரியாரும் உறுதிப்படுத்துகிறார்.

எழிலுலகம் படைத்து எல்லா உயிர்களுக்கும்
வழிவழியாக வாழ வாய்ப்பை நிரப்பி வைத்து

ஒழிவிலாத் தொடராக உள்ளும் புறமும் ஊற்றாய்
அழிவிலாப் பேரின்ப அறிவலையாய்த் திகழும், ((ஞா.க.பா.1646-2)

பிரபஞ்சமமாகி எண்ணிடலடங்காத கோள்களிலே, நில உலகமும்,சீவ இனங்களுமாகி தொடர்ந்து வழிவழியாக வாழ்வதற்கு வாய்ப்புகளையும் நிரப்பி வைத்து,,,,,,,,,

ஓய்வு இல்லாமல், அகமும் புறமுமாக, அழிவில்லாத பேரறிவாக எல்லாவற்றிலும் இருந்து, இயக்கி, காத்து, முடித்தும் வைக்கிறது...என்கிறார் வேதாத்திரியார்.

## 6.தீய கர்மம் புகாமல் இருந்தால் முழுமை பெறலாம்.

மனம் தூய்மையில் பூரணத்தை அடைந்து அமைதியாக இருப்பதே முழுமைப்பேறு.

தவத்தாலும் தற்சோதனையாலும் கிடைக்கும் குணநலப் பேற்றின் இறுதிப்படிதான் முழுமைப் பேறாகும்.

பற்றுவன அற்றிடும் நிராசை என்று ஒருபூமி
பற்றிப் பிடிக்கும்யோகப்
பாங்கில் பிராணலயம் என்னும் ஒரு பூமி,இவை
பற்றின்மனம் அறும்என்னவே

கற்றைஅம் சடைமௌனி தானே கனிந்தகனி
கனிவிக்க வந்தகனிபோல்
கண்டது இந் நெறி எனத் திருஉளக் கனிவினொடு
கனிவாய் திறந்தும் ஒன்றைப்

பெற்றவனும் அல்லேன் பெறாதவனும் அல்லேன்
பெருக்கத் தவித்து உளறியே
பெண்நீர்மை என்னஇரு கண்ணீர் இறைத்துநான்
பேய்போல் இருக்கஉலகம்

சுற்றிநகை செய்யவே உலையவிட் டாயெனில்
சொல்லஇனி வாயும் உண்டோ?

சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. (தா.பா.82. சுகவாரி பா.6)

ஐம்பொறிகளாலும் பற்றப்படும் ஐம்புலன்களாகிய பற்றும் அற்று, அவாவின்மை என்று சொல்லப்படும் ஒருநிலத்தில், நிலைத்து நிற்கும் பொருட்டு,

அதனைப் பற்றிப் பிடிப்பதற்கு ஏதுவாக பிராணனை அடக்க, மூச்சுப்பயிற்சி என்னும் ஒரு நிலம் உண்டு. இவற்றைப் பற்றி நிற்க மனம் இறந்துபடும்.

இதனை அறிவிக்கத் திரட்டிக் கட்டப்பட்ட அழகிய சடாமுடியுடன் விளங்கும் மௌனகுரு என்னும் (ஒரு வாழைத்தாரில் முதலில் ஒரு கனி தானே கனிந்தது போல) தானே கனிந்த ஒரு கனி,

ஏனைய காய்களை கனிவிக்க வந்தது போல "தான் கண்ட நெறி, இந்நெறியே" என்று திருவுள்ளத்தில் இரக்கம் கொண்டு கொவ்வைக் கனி போன்ற சிவந்த உதடுகளுடன் கூடிய தனது வாயினைத் திறந்து,

ஒரு வார்த்தை சொல்லப் பெற்றவனும் அல்லேன். சொல்லாததால் ஒன்றுமட பெறாவதவனும் அல்லேன்.


ஆனால் மிகவும் உடல் இளைத்து , அரற்றித் தவிப்பெய்தி. துணையின்றி வாழமுடியாத பெண்மைபோல் இரு கண்களிலும் கண்ணீர் பெருக,

நான் பேய் போல் இருக்க, என்னைச் சுற்றிநின்று, உலக மக்கள் எள்ளி நகையாட. அலையவிட்டாய் ஆயின், இதுகுறித்து மேற்கொண்டு எடுத்துக்கூற எனக்கு வாய்தான் உண்டோ?

தீய கர்மம் புகாமல் கண்ணும் கருத்துமாக இருந்தால் உலக மக்கள் எள்ளி நகையாட மாட்டார்கள். இறைநிலையும் நம்மை அலையவிடாது என்கிறார் வேதாத்திரியார்.

உண்மை நிலை மறந்து உணர்வு தன்முனைப்பாகி
எண்ணம் 'தான்' 'தனது' என்று இறுகிக் குறுகி நின்று

மண்ணைப் பொன்னை மென்மேலும் மாறிமாறி நினைந்து
கண்ணும் கருத்தும் தீய காமம் புகாமல் என்னுள் (ஞா.க.பா.1646-3)



பிரபஞ்சமமாகி எண்ணிடலடங்காத கோள்களிலே, நில உலகமும்,சீவ இனங்களுமாகி தொடர்ந்து வழிவழியாக வாழ்வதற்கு வாய்ப்புகளையும் நிரப்பி வைத்து. ஓய்வு இல்லாமல், அகமும் புறமுமாக, அழிவில்லாத பேரறிவாக எல்லாவற்றிலும் இருந்து, இயக்கி, காத்து, முடித்தும் வைக்கிறது.

இந்த உண்மைகளை எல்லாம் மறந்து மயக்க நிலையில் தன்முனப்பின் காரணமாக அழிந்து போகக்கூடிய உலகியில் விஷயங்களையே நினைந்து, பற்றுக் கொள்ளக்கூடிய தீய வினைப்பதிவுகள் என்னுள் புகுந்துவிடாமல், இறைவா நீ காப்பாயாக.

## 7. ஆனந்த வெள்ளமே

வெளிச்சத்திலே இருள் நிறைந்திருப்பது போல் அறிவிலே. தெய்வம் என்ற நிலை இருக்கிறது.

அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவேஎன் அறிவில் ஊறும்
ஆனந்த வெள்ளமே என்றுஎன்று பாடினேன்
ஆடினேன், நாடிநாடி

விரும்பியே கூவினேன், உலறினேன், அலறினேன்,
மெய்சிலிர்த்து இருகைகூப்பி
விண்மாரி எனஎன் இரு கண்மாரி பெய்யவே
வேசற்று அயர்ந்தேன் . யான்

இரும்புநேர் நெஞ்சகக் கள்வன் ஆனாலும்உனை
இடைவிட்டு நின்றதுண்டோ?

என்றுநீ அன்றுநான் உன்அடிமை அல்லவோ,
யாதேனும் அறியாவெறும்

துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ?
தொண்டரொடு கூட்டுகண்டாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. (தா.பா.83. சுகவாரி பா.7)

அரிய பொன்னே! மணியே! எனது அன்பே! என் அன்பினில் ஊறும் அறிவே! என் அறிவில் ஏறும் இன்பப் பெருக்கே!" என்றெல்லாம் பலவாறாகப் புகழந்து பாடினேன்.

ஆடினேன். மிகுதியும் விருப்பம் கொண்டு கூவி அழைத்தேன். நா வரண்டேன். கூப்பாடு போட்டேன்.

உடம்பிலுள்ள உரோமம் சிலிர்ப்ப, இரண்டு கைகளையும் தலைமேல் கூப்பி, விண்ணிலிருந்து மழை பொழிவது போல கண்ணிலிருந்து கண்ணீர் மழை பொழிய நின்று, அயர்ச்சி அடைந்தேன்.

இரும்பு போன்ற வலிய மனம் படைத்த கள்ளத்தனம் உடையவன் ஆனாலும், இடையில் உன்னை விட்டுப் பிரிந்து சென்றதுண்டோ?




என்றிலிருந்து நீ இருக்கிறாயோ, அன்றிலிருந்து நானும் இருக்கிறேன். நான் உன்னுடைய அடிமை அல்லவா?

ஒன்றும்அறியாத வெறும் சிறுதுரும்பு போன்றவன் என்றாலும், என்னைக் கைவிடுதல் நீதியாகுமோ? எனவே என்னை உனது அடியார்களோடு கூட்டுவிப்பாயாகா!

ஆதிசங்கரர் சொல்லுவாரே "சத்சங்கத்தவே நித்சங்கத்வம்" என்று அதைத்தான் தாயுமானவரும் சொல்கிறார்

உணர்ச்சி நிலையிலிருந்து அறிவு நிலைக்கு உயர்ந்தால் இறைநிலையை உணரலாம் என்கிறது வேதாத்திரியாரின் ஞானக்களஞ்சியம்.

உணர்ச்சியாய்ச் சிந்தனையாய் உள்ளதே அறிவென்று,
உணர்ந்திருந்தேன் பலநாள், மேலும் உண்மை விளங்க
உணர்ச்சிக்கு முன்னம் விண்ணில் ஒழுங்காற்றலாய் விளங்கும்,
உனது திருநிலையும் அறிவே என உணர்ந்தேன். (ஞா.க.பா.1648-2)

பலநாட்கள் உடல் உணர்ச்சிகளையும், எண்ணங்களையுமே அறிவு என்று கருதியிருந்தேன்.

உணர்ச்சிக்கு முன்நிலையாகிய உயிர் என்னும் விணணின் இயக்க ஒழுங்கே அறிவு என்பதையும் நீயும் அறிவுதான் என்பதையும உணாந்தேன் என்கிறார் பேரின்ப ஊற்றில்...வேதாத்திரியார்.

## 8.துரியாதீத நிலைக்கு செல்ல நாள் ஆகுமோ?

வாழும் போதே இறைவனடி சேர, துரியாதீதம். தவத்தில் முழுமையான தவநிலை துரியாதீதம்.

ஒவ்வொருவருக்கும் தவம் எடுப்பதே ஒரு பெரிய விழா நாள்தான். ஆனால் அதன் பிறகு துரியாதீத நிலையை எய்தும் நாள் அதைவிட ஒரு பெருமையான விழா நாள் என்று சொல்லலாம்.

இதைப் புரிந்து கொள்வதற்கு உண்மையான தத்துவத்தை கொஞ்சம் உணர வேண்டும். அதை பிரம்ம ஞானம் என்று சொல்கிறோம்.

பார் ஆதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியின் உண்மைகாட்டிப்,
பற்றுமன வெளிகாட்டி, மனவெளியி னில்தோய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித்,

தாராள மாய்நிற்க நிர்ச்சந்தை காட்டிச்
சதாகால நிட்டைஎனவே
சகஜநிலை காட்டினை. சுகாதீத நிலையம்
தனைக்காட்ட நாள் செல்லுமோ?

கார் ஆர எண்ணரும் அனந்தகோ டிகள்நின்று

கால்  ஊன்றி மழைபொழிதல்போல்
கால்வீசி மின்னிப் படர்ந்து, பர வெளியெலாம்
கம்மி,  ஆனந்தவெள்ளம்

சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரஞ்ம்
சோதியே சுகவாரியே. (தா.பா.84. சுகவாரி பா.8)



எண்ணிச் சொல்ல முடியாத பல கோடி மேகங்கள் கால் ஊன்றி நின்று, மழையினைப் பொழிவது போலக் காற்று வீசி, மின்னல் மின்னி, மேலான வெளியைக் கவித்து நின்று,

பேரின்ப வெள்ளத்தை இடைவிடாது பொழிவதற்கு அருளால் முழங்கி, அன்பர்களைக் கூவி அழைக்கும் மழைமேகமே!

தூய, முக்குண வசப்படாத மேலான தெய்வமே! பேரொளிப் பிழம்பே! இன்பக் கடலே!

நிலம் முதலாகச் சொல்லப்பட்ட அண்டங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கி நிற்கும் பரவெளியின் உண்மை நிலையைக் காட்டி, அப்பெரு வெளியினைத் தொடர்ந்து பற்றி நிற்கும் மனவெளியையும் காட்டி, அம்மனமாகிய வெளியில் பிணைத்து நிற்கும் பாவியாகிய அடியேனது தன்மையும் காட்டி,

மனம் விரிந்து நிற்க ஏதுவாக மனம் இறந்த நிலையினையும் காட்டி, எல்லாக் காலங்களிலும் மனம் ஒருப்பட்ட நிற்கும் உண்மை நிலையைக் காட்டி அருளினை!

இந்நிட்டைக்கும்அப்பால் உள்ள் சுகாதீத இன்ப நிலையத்தைக் காட்டி அருள மேலும் பலநாள் செல்லுமோ?

சுகாதீத இன்ப நிலையத்திற்கு, துரியாதீத நிலைக்கு செல்லும் நிலையை வேதாத்திரியார் துல்லியமாக காட்டுகிறார்.

பரம அணு முதலாய்ப் பார். விண்மீன் அனைத்தும்,
பம்பரம் போல் சுழன்று, மிதந்துருண்டு உன்னில்
தரம் அறிவே என்னும் தத்துவம் உணர்ந்திட்டேன்!
தற்பரனாக, உன்னை என்னுள் உணரப்பெற்றேன்! (ஞா.க.பா.1648-4)

பரம் என்றால் அதைவிடப் பெரியதோ, நுண்ணியதோ இல்லை என்பதாகும். பரத்தின் அசைவில் தோன்றியது பரம அணு.

பரம அணுக்களின் கூட்டு விண்கள். விணகளின் கூட்டு பஞ்சபூதங்கள். பஞ்சபூதங்களின் கூட்டு விண்மீன் எனப்படும் கோள்.

கோள்கள் ஒவ்வொன்றும் பம்பரம் சுழல்வது போல, தற்சுழற்சி கொண்டு, பரம் என்னும் சுத்த வெளிக்குள்ளாகவே மிதந்து கொண்டும், உருண்டு கொண்டும் இயங்குகின்றன.

அந்த இயக்கங்களுக்கொல்லாம், சுத்தவெளியின் தரமாகிய அறிவுதான் காரணம் என்ற தத்துவத்தையும உணர்ந்து விட்டேன்.

தானே பரமாக உணர்வது தற்பரம் ஆகும். மேன்மையான உன்னையே எனக்குள்ளாகவும உணர்ந்து தற்பரனானேன்.

## 9. சுகமாவது எப்படிசொலாய்?

அமைதியென்ற உணர்ச்சியில் மனம் புலன் கவர்ச்சயிலிருந்து விடுபட்டு இயற்கையில் நடைபெறும் அற்புத நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி- மனம் நிறைவு பெறுமேயானால் அதுதான் பேரின்பம்.

பேதித்த சமயமோ ஒன்றுசொன படி ஒன்று
பேசாது துறவு ஆகியே
பேசாத பெரியோர்கள் நிர்விகற் பத்தினால்
பேசார்கள், பரமகுருவாய்ப்

போதிக்கும் முக்கண்இறை நேர்மையாய்க் கைக்கொண்டு
போதிப்பது ஆச்சு அறிவிலே
போக்குவரவு அறஇன்ப நீக்கம் அற வசனமாப்
போதிப்பது எவர் ஐயனே?

சாதித்த சாதனமும் யோகியர்கள் நமதென்று
சங்கிப்பர் ஆதலாலே
தன்னிலே தானாய் அயர்ந்துவிடு வோம் எனத்
தனிஇருந் திடின் அங்ஙனே

சோதிக்க மனமாயை தனைஏவி னால் அடிமை
சுகமாவது எப்படிசொலாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே!. (தா.பா.85. சுகவாரி பா.9)

தங்களுக்குள் மாறுபாடு கொண்டுள்ள சமய நூல்கள் ஒன்று சொன்னபடி, மற்றொன்று சொல்வதில்லை.

துறவை மேற்கொண்டு, பேசுவதை விடுத்து, மனம் இறந்துபட, நிட்டை கூடும் பெரயோரோ, வாய் திறந்து ஒன்றும் பேசுவதில்லை.



மேலான குருவாய் எழுந்தருளும் மூன்று கண்களுடன் விளங்கும் இறைவனாகிய தட்சிணா மூர்த்தியோ, சின்முத்திரை காட்டியது தவிர, வேற போதனை எதுவும் செய்வதில்லை.

இவ்வாறிருக்க ஐயனே! போக்கும்வரவும் இல்லாததாய், பேரின்பம் இடைவிடாது உண்டாகுமாறு, சொல்லின் வாயிலாகச் சொல்லிப் போதிக்க எவர் உளர்?

யோகியர்கள் சாதித்தது அனைத்தும், தங்களின் யோகப் பயிற்சியால் கைகூடியது என்ற கூறுவர்.

ஆகையால் தன்னில் தானாய் தனித்திருந்து, தன்னிலை மறந்து இருக்கலாம் என நினைத்தாலோ, மனத்தில் மாயையை ஏவி மயக்க நினைக்கின்றாய்.

இப்படிச் செய்தால் அடிமையாகிய நான் இன்பம பெறுவது எப்படி? சொல்வாயாக!

இன்பம் பெறுவது எப்படி எனக் கேட்கும் தாயுமானவருக்கு இன்ப ஊற்றில் விடையைப் பார்க்கலாம்.

ஆதிநிலை வெளியில், அறிவும் விரைவுமாக
அடங்கியுள்ள தன்மையே அணுமுதல் அனைத்துக்குள்ளும்
நீதி ஒழுங்கமைப்பாய், நேர்முகக் காட்சிகளாய்,
நிறைந்த திருவருளை நினைக்க நினைக்க என்னுள் ((ஞா.க.பா.1648-3)

ஆதி, அநாதி, சுத்தவெளி எனப்படும் இறைநிலையானது இயக்க ஒழுங்கோடு தோற்றங்களாகி,,,,

அனைத்திற்குள்ளும் வேகமாகவும், விவேகமாகவும் இருந்து, நியதி தவறாமல் இயக்கியும் காத்தும் முடித்தும் வைக்கிறது என்பதை நேரடிக் காட்சியாக அகத்துணர்வாக உணர்ந்தேன்.

அந்தக் காட்சியை எண்ணுகிறபோது, எனக்குள்ளும் புறமுகமாக அன்பு ஊற்றாக இன்ப ஊற்றாக இறைநிலையை உணர்கிறேன் என்கிறார் வேதாத்திரியார்.

## 10. இறைவன் இருப்பது எங்கே?

பேராற்றல், பேரறிவு, காலம் என்ற நான்கும் இறைவெளியின் தன்மைகளாக ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாததாக அமைந்துள்ளன.

அண்டமுடி தன்னிலோ, பகிரண்டம் அதனிலோ,
அலரிமண் டலநடுவிலோ,
அனல்நடுவி லோ, அமிர்த மதநடுவி லோ,அன்பர்
அகம் உருகி மலர்கள்தூவித்

தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ, திக்குத்
திகந்தத்தி லோ, வெளியிலோ,
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ, வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ,

கண்டபல பொருளிலோ, காணாத நிலை எனக்
கண்டசூ னியமதனிலோ,
காலம் ஒரு மூன்றிலோ, பிறவிநிலை தன்னிலோ,
கருவிகர ணங்கள் ஓய்ந்த

தொண்டர்கள் இடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற்கு உளவுபுகலாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. (தா.பா.86. சுகவாரி பா.10)

- (நீவிர்..எழுந்தருளி இருப்பது) அண்டமுகட்டிலா?
- பேரண்டம் அதனிலா?
- சூரிய மண்டலத்தின் நடுவிலா?
- தீயின் நடுவிலா?
- அமுத கிரணங்களைப் பரவ விடும் சந்திர மண்டலத்து நடுவிலா?
- மெய்யன்பர்கள் மனம் உருகி, மலர்கள் தூவி, விழுந்து வணங்க எழுந்தருளி இருக்கும் விக்கரங்களிலா?
- திசையிலா? திசைகளின் முடிவிலா?
- பரவெளியிலா? நாத, விந்து நிலையிலா?
- வேதாந்த, சித்தாந்த நிலையிலா?
- கண்ணால் காணப்படும் பொருள்களிலா?
- காணப்படாத சூக்கமத்திலா?
- பாழ் எனப்படும் பரவெளியிலா?
- இறந்த காலம், நிகழ்காலம்,
- எதிர்காலம் என்று அழைக்கப்படும் காலம் மூன்றிலா படைப்பிலா?
- அக்கருவிகளோடும் புறக்கருவிகளோடும் உடலெடுத்துப் பிறந்து வந்துள்ள தொண்டர்களிடத்திலா?



அடிமையாகிய எனக்கு, ”நீவீர் எழுந்தருளி இருக்கும் இடம் எது?” என்பதை அறிவிப்பாயாக!

இறைவன் எழுந்திருக்கும் இடம் என்பது எது என்பதை தாயுமானவரின் கேள்விக்கு விடையாக வருகிறார் வேதாத்திரியார்.

"உன்னிலே நானடங்க, என்னுளே நீ விளங்க,

உனது தன்மை ஒளிர, எனதுள்ளம் தூய்மை பெற்றேன்" (ஞாக.பா. 1648-5)

சுத்தவெளியே தன் நிலையையில் மாற்றம் பெற்று, எல்லாத் தோற்றங்களுமாகியிருக்கிறது என்பதை ஆத்மானுபவமாக உணர்ந்போது, உனக்குள்ளாக நான் அடங்கியிருக்க, எனக்குள்ளே நீ அறிவாக விளங்குவதை உணர்ந்தேன்.

உனது தெய்வீகத் தன்மையானது எனது அறிவைத் தெளிவுபடுத்தியதால், உள்ளத்தூய்மை பெற்றுவிட்டேன்.

மனிதன் அடைய வேண்டிய பெரும் பேற்றினைப் பெற்றுவிட்டேன்.

இனி எனக்கு என்ன வேண்டும்? மனிதப் பிறப்பும் எடுத்த நோக்கம் நிறைவுற்று முழுமை பெற்றேன் என்கிறது பேரின்ப களிப்பு.

## 11.இந்த உடம்பு நிலையானது அல்லவே?

ஊனுடம்பே ஆலயம், உள்ளம் பெருங்கோயில் என்றார் திருமூலர். உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்றும் சொல்வார் திருமூலர்.

"உடலுக்குள் நீ நின்று உலாவினதைக் காணாமல் கடல்மலை தோறும் திரிந்து கால் அலுத்தேன் பூரணமே!" என்பார் பட்டினத்தார்

எந்தநாள் கருணைக் குரித்தாகும் நாள் எனவும்
என் இதயம் எனைவாட்டுதே.
ஏதுஎன்று சொல்லுவேன் முன்னொடுபின் மலைவுஅறவும்
இற்றைவரை யாதுபெற்றேன்?

பந்தமா னதில் இட்ட மெழுகாகி உள்ளம்
பதைத்துப் பதைத்து உருகவோ?

பரமசுகம் ஆவது பொறுப்புஅ ரிய துயரமாய்ப்
பலகாலும் மூர்ச்சிப்பதோ?

சிந்தையா னதும் அறிவை, என் அறிவில் அறிவுஆன
தெய்வம்நீ அன்றி உளதோ?
தேகம் நிலை அல்லவே உடைகப்பல் கப்பலாய்த்
திரைஆழி ஊடுசெலுமோ?

சொந்தமாய் ஆண்டநீ அறியார்கள் போலவே
துன்பத்தில் ஆழ்த்தல் முறையோ?
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. (தா.பா.87. சுகவாரி பா.11)

"தேவரீர் என்மீது இரக்கம் காட்டப் போகும் நாள், எந்த நாள்?" என்று கேள்வி கேட்டு, என்மனம் என்னைத் துளைத்து எடுக்கிறதே! இதற்கு எவ்வாறு விடை கூறுவேன்?

முன்னுக்குப் பின் முரண் இல்லாதபடி இன்றுவரை அடியேன் பெற்றது யாது?

தீப்பந்தத்தில் பட்ட மெழுகு போல் உள்ளம் நடுநடுங்கி உருகலாகுமோ?

மேலான இன்பமானது, எப்பொழுது வந்து எய்தும்? பொறுத்துக் கொள்ள முடியாத அளவு துன்பம் அடைந்து பல முறையும் மூர்ச்சு அடைகிறேனே! "என் சிந்தையில் இருப்பது என்ன?" என்பதை நீ அறிவாய்!



என் அறிவுக்கு அறிவான தெய்வம் உன்னைத் தவிர வேறு உண்டோ?

இந்த உடம்பு நிலையானது அல்லவே?

உடைந்த கப்பல், நல்ல கப்பலாய் அலை வீசும் கடல் நடுவில்

செல்லும் தகுதி உடையதோ?

உரிமையோடு என்னை அடிமை கொண்ட நீ, முன்பின் தெரியாதவர் போல் நடித்து. என்னைத் துன்பத்தில் மூழ்கச் செய்தல் முறையான செயல் ஆகுமோ?

தாயுமானவரைப் போல் வேதாத்திரியாரும் பேரின்ப ஊற்றில்....."உடலாய் என்னை நினைத்தேன்" என வருந்துவதைக் காணலாம்...

ஆனால் "உடலுயிர் அறிவு நீயாய், உணர்ந்துன்னுள் நான் அடங்க" என்று விளக்கம் பெற்று சரியான பாதையில் மானுடத்தை அழைத்துச் செல்கிறார்.

உடலாய் எனை நினைந்தேன் உணர்ச்சிகள் வருந்தின
உடலுள் உயிராய் என்னை உயர்ந்து அறிவில் நிறைந்தேன்
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள்நான் அடங்க"" (ஞா.க.பா.1646-4)

அழிந்து போகக்கூடிய உடலையே நான் என்று கருதியபோது உணர்ச்சிவயப்பட்ட நிலையில் துன்புற்றேன.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு. அந்த அறிவே நானாகவும், நீயாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

## 12. சுகம்வருவது எப்படிசொலாய்.

- "பேரின்பம் என்பது அறிவின் உயர்நிலை,
- பேரின்பம் என்பது அறிவின் முதிர்ச்சி,
- பேரின்பம் என்பது அறிவின் முதுமை,
- பேரின்பம் என்பது அறிவின் ஞானஒளி,

பேரின்பம் என்பது, மனித குலத்தில் நாம் வாழ்கின்ற அனைவருக்கும், எட்டாகனியாகவே நினைத்திருந்த அந்த ஞானக் கனியைப் பாமரமக்களும் சுவைத்து. இன்புற்று,,,,,,

பேரின்ப பெறுவாழ்வு பெறவதற்கு ஏற்ற இறைநிலை உணர்வை, நமது உயிராற்றல் மூலமாகவே மேலே ஏற்றி, உயிர் உணர்வு பெறச் செய்து,,,,

அதன் மூலமாகவே இறைநில உணர்வு பெறச் செய்து.....

அதன் மூலமாக அமைதி உள்ள ஓர் நிலையை அடைந்து......

அந்த அமைதி நிலையிலேயே, அயரா விழிப்பு நிலையில் நின்று..

இல்லறத்தை நல்லறமாக மாற்றி அறநெறியில் வாழ்கின்ற பொழுது, பேரின்ப நிலை கிட்டுகிறது.

எந்நாளும் உடலிலே உயிராம் உனைப்போல்
 இருக்க இலை யோ? மனதுஎனும்
யானும் என் நட்பாம் பிராணனும் எமைச்சடமது
 என்றுஉனைச் சித்து என்றுமே


அந்நாளில் எவனோ பிரித்தான். அதைக்கேட்ட
 அன்றுமுதல் இன்றுவரையும்
அநியாய மாய் எமை அடக்கிக் குறுக்கே
 அடர்ந்து அரசு பண்ணி, எங்கள்

முன்னாக நீஎன்ன கோட்டைகொண் டாய் என்று
 மூடமனம் மிகவும்ஏச
மூண்டு எரியும் அனல் இட்ட மெழுகாய் உளங்கருகல்
 முறைமையோ? பதினாயிரம்

சொன்னாலும் நின்அருள் இரங்கவிலை யேஇனிச்
 சுகம்வருவது எப்படிசொலாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
 சோதியே சுகவாரியே. (தா.பா.88. சுகவாரி பா.12)

"எப்பொழுதும் இந்த உடலிலே, உயிரே உன்னைப்போல நானும் இருக்கவில்லையோ?

மனமாகிய நானும், எனது நட்பாய் இருந்துவரும் பிராணனும் ஆகிய எங்களை "அறிவற்றவை" என்றும், உன்னை "அறிவுடையது" என்றும், அந்த நாளிலேயே எவனோ பிரித்து வைத்து விட்டான்.



அன்று தொடங்கி இன்றுவரை நியாயமற்ற முறையில் எங்களை அடக்கி வைத்துவிட்டு, குறுக்கே புகுந்து வலிய அரசாட்சி செய்து, எந்தக் கோட்டையைப் பிடித்தாய்!" என்று அறிவில்லாத மனம் மிகவும் பழித்து உரைக்க, கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் பட்ட மெழுகுபோல் உள்ளம் கருகுதல் முறைமை ஆகுமோ?

பத்தாயிரம் முறை எடுத்துரைப்பினும் உனது மனம் இரக்கம் காட்டவில்லையே! இனிப் பேரின்பம் வருவது எவ்வாறு சொல்வாயாக!

தாயுமானவரைப் போல் வேதாத்திரி மகரிசியும் பேரின்பக் களிப்பில் பாடுகிறார்....

வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே
எனை மறந்தேன் என்றன் வினை மறந்தேன் இறைவா !
எனை மறந்தேன் ஆனால் நீ உள் நிறைந்து எனை மீட்டு.(ஞாக. பா.1646-5)

கர்ம வினைப் பதிவுகளைக் கழித்து ஆன்மாவைத் தூய்மை செய்து கொள்வதற்காகவே உடலெடுத்து நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளேன்.

பிறவியின் நோக்கத்தையும் என் வினைகளையும், உன் பெருமையையும் மறந்துவிட்டேன். ஆனால் நீ என்னுள்ளே அறிவாக நிறைந்து வழி நடத்துவாயாக.

மண் என்ற நிலம் மீது பெண் துணைகொண்டு பொருளை கொண்டு வாழ்க்கை வாழ்ந்து வரும் மனிதனாவன், அந்த பொருள்களிலிருந்து பெறுகின்ற அனுபோகமே இன்பம் என்றும்...

அதுவே பொருள் என்ற மயக்கநிலையில் மதி மயங்கி வாழும் மனிதனின் அறிவு நிலையை உயர்த்தி மெய்ப்பொருள் ஒன்றே உய்மைப் பொருள். இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்த தோற்றங்களும் நிகழ்ச்சியே என்ற அயரா விழிப்பு நிலையில தாமரை இலை தண்ணீர்போல,,,,

உறவிலே கண்ட உண்மைநிலை தெளிவே துறவு என்ற நிலையில் காணும்பொழுது.....

மெய்பபொருள் நிலை மறவாது மூன்று தோற்றங்களிலிருந்து அனுபோகமாக எவன் ஒருவன் இன்பத்தை பெறுகின்றானோ....

அதுவே அவனது நிலைத்த, நீடித்த மகிழச்சியான, நிலையான இன்பமாகிய பேரின்பம் ஆகும்.

"பொருளல்லவற்றை பொருளாக கொள்ளும்

மருளானம் மான பிறப்பு"

என்கிறார் வள்ளுவர். அதன்வழி வேதாத்திரி மகரசி அவர்ளும் மெய்பபொருள் என்று நமக்கு உணாத்துகிறார்.

"ஓடும் சொம்பொன்னும் ஒக்கவே நோக்குகின்ற

அறிவின் உணர்நிலையே பேரின்பம்"

## பேரின்பத்தின் இறுதி இலக்கு

மெய்ஞ்ஞானத்தின் அடிப்படை ‘தன்னையறிதல்’. தன்னையறியும் முயற்சியில் ஈடுபடுபவர் தான் பேரின்பத்தின் இறுதி இலக்கான இறைவனை அடைய முடியும்.

அந்த நிகழ்முறையில், இவ்வுலக ஆசைகளை விட்டொழித்து, நிலையாமையை உணர்ந்து, இறை வழிபாட்டில் தன்னைக் கரைத்துக் கொள்வதே ஞானநெறியாகும்.

இருவருமே ஞானநெறியில் ஈடுபட்டு, ஆனந்தக் கடலில், பேரின்ப ஊற்றில் அடைந்தனர்.

"சுகவாரியில்" தாயுமானவரும், "இன்ப ஊற்றில்" வேதாத்திரி மகரிசியும் சொல்லியதை உணர்ந்து உள்வாங்கி ஆனந்தமாக வாழ்வோமாக.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!!

## பிற்சேர்க்கை

## தாயுமானவரின் சுகவாரி பாடல்கள்

1.இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்
எனருசித் திடவலியவந்து
இன்பம் கொடுத்த நினை எந்நேரம் நின் அன்பர்
இடையறாது உருகிநாடி,

உன்னிய கருத்து அவிழ உரைகுளறி, உடல் எங்கும்
ஓய்ந்து அயர்ந்து அவசமாகி
உணர்வு அரிய பேரின்ப அநுபூதி உணர்விலே
உணர்வார்கள் உள்ளபடிகாண்.
கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பு என்னினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்,
கணவன் அருள் பெறின்முனே சொன்னவாறு என்னனக்
கருதிநகை யாவள் அதுபோல்

சொன்னபடி கேட்கும் இப் பேதைக்கு நின்கருணை
தோற்றின் சுகாரம்பமாம்.
சுத்தநீர்க் குணமான பர தெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே. 1

2.அன்பின்வழி அறியாத என்னைத் தொடர்ந்து என்னை,
அறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்து, நான்
அற்றேன் அலந்தேன் என

என்புலன் மயங்கவே பித்தேற்றி விட்டாய்.
இரங்கிஒரு வழியாயினும்
இன்ப வெள்ளம் ஆகவந்து உள்ளம் களிக்கவே
எனைநீ கலந்தது உண்டோ?

தன்பருவ மலருக்கு மணம் உண்டு வண்டு உண்டு
தண்முகை தனக்கும் உண்டோ?
தமியனேற்கு இவ்வணம் திருவுளம் இரங்காத
தன்மையால் தனியிருந்து

துன்பம் உறின் எங்ஙனே அழியாத நின் அன்பர்
சுகம்வந்து வாய்க்கும்உரையாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே. 2.

3.கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும் என்
கல்நெஞ்சம் உருகஇலையே.

கருணைக்கு இணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்கஒருகடவுளோ?

வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு
வழக்குக்கு இழுக்கும் உண்டோ?
வானமாய் நின்று இன்ப மழையாய் இறங்கிஎனை
வாழ்விப்பதுஉஉன்பரங்காண்.

பொல்லாத சேய் எனில் தாய்தள்ளல் நீதமோ?
புகலிடம் பிறிதும் உண்டோ?
பொய்வார்த்தை சொல்லிலோ திருஅருட்கு அயலுமாய்ப்
புன்மையேன் ஆவன், அந்தோ

சொல்லால் முழக்கிலோ சுகம் இல்லை, மௌனியாய்ச்

சும்மா இருக்கஅருளாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. 3.

4.என்பு எலாம் நெக்கு உடைய, ரோமம் சிலிர்ப்ப, உடல்
இளக, மனது அழலின்மெழுகாய்
இடையறாது உருக, வரு மழைபோல் இரங்கியே
இருவிழிகள் நீரிறைப்ப,

அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அங்ஙனே
அமிர்தசஞ் சீவிபோல்வந்து
ஆனந்த மழைபொழிவை. உள் அன்பு இலாதஎனை
யார்க்காக அடிமைகொண்டாய்.

புன்புலால் மயிர்தோல் நரம்பு என்பு மொய்த்திடு
புலைக்குடிலில் அருவருப்புப்
பொய் அல்லவே, இதனை மெய் என்று நம்பிஎன்
புந்திசெலு மோபாழிலே?

துன்பமாய் அலையவோ? உலகநடை ஐ ஒரு
சொப்பனத் தினும் வேண்டிலேன்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. 4.

5.வெந்நீர் பொறாது என்உடல் காலில் முள் தைக்கவும்
வெடுக்கென்று அசைத்து எடுத்தால்
விழிஇமைத்து அங்ஙனே தண்ணருளை நாடுவேன்.
வறு ஒன்றை ஒருவர்கொல்லின்

அந்நேரம் ஐயோஎன் முகம்வாடி நிற்பதுவும்
ஐயநின் அருள் அறியுமே.

ஆனாலும் மெத்தப் பயந்தவன் யான்என்னை
ஆண்டநீ கைவிடாதே.

இந்நேரம் என்றுஇலை உடற்சுமை அது ஆகவும்
எடுத்தா இறக்கஎன்றே
எங்கு எங்கும் ஒருதீர்வை ஆயம் உண் டு ஆயினும்
இறைஞ்சு சுகர் ஆதியான

தொல்நீர்மை யாளர்க்கு மானுடம் வகுத்தஅருள்
துணைஎன்று நம்புகின்றேன்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மே பரம்
சோதியே சுகவாரியே. 5.

6.பற்றுவன அற்றிடும் நிராசை என்று ஒருபூமி
பற்றிப் பிடிக்கும்யோகப்
பாங்கிற்ல் பிராணலயம் என்னும் ஒரு பூமி,இவை
பற்றின்மனம் அறும்என்னவே

கற்றைஅம் சடைமௌனி தானே கனிந்தகனி
கனிவிக்க வந்தகனிபோல்
கண்டது இந் நெறி எனத் திருஉளக் கனிவினொடு
கனிவாய் திறந்தும் ஒன்றைப்

பெற்றவனும் அல்லேன் பெறாதவனும் அல்லேன்
பெருக்கத் தவித்து உளறியே
பெண்நீர்மை என்னஇரு கண்ணீர் இறைத்துநான்
பேய்போல் இருக்கஉலகம்

சுற்றிநகை செய்யவே உலையவிட் டாயெனில்
சொல்லஇனி வாயும் உண்டோ?
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. 6.

7.அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவேஎன் அறிவில் ஊறும்
ஆனந்த வெள்ளமே என்றுஎன்று பாடினேன்
ஆடினேன், நாடிநாடி

விரும்பியே கூவினேன், உலறினேன், அலறினேன்,
மெய்சிலிர்த்து இருகைகூப்பி
விண்மாரி எனஎன் இரு கண்மாரி பெய்யவே
வேசற்று அயர்ந்தேன் . யான்

இரும்புநேர் நெஞ்சகக் கள்வன் ஆனாலும்உனை
இடைவிட்டு நின்றதுண்டோ?
என்றுநீ அன்றுநான் உன்அடிமை அல்லவோ,
யாதேனும் அறியாவெறும்

துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ?
தொண்டரொடு கூட்டுகண்டாய்.
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. 7.

8.பார் ஆதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியின் உண்மைகாட்டிப்,
பற்றுமன வெளிகாட்டி, மனவெளியி னில்தோய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித்,

தாராள மாய்நிற்க நிர்ச்சந்தை காட்டிச்
சதாகால நிட்டைஎனவே
சகஜநிலை காட்டினை. சுகாதீத நிலயம்
தனைக்காட்ட நாள்செல்லுமோ?

கார் ஆர எண்ணரும் அனந்தகோ டிகள்நின்று
கால் ஊன்றி மழைபொழிதல்போல்

கால்வீசி மின்னிப் படர்ந்து, பர வெளியெலாம்
கம்மி, ஆனந்தவெள்ளம்

சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரஞ்ம்
சோதியே சுகவாரியே. 8.

9.பேதித்த சமயமோ ஒன்றுசொன பபடி ஒன்று
பேசாது துறவு ஆகியே
பேசாத பெரியோர்கள் நிர்விகற் பத்தினால்
பேசார்கள், பரமகுருவாய்ப்

போதிக்கும் முக்கண்இறை நேர்மையாய்க் கைக்கொண்டு
போதிப்பது ஆச்சு அறிவிலே
போக்குவரவு அறஇன்ப நீக்கம் அற வசனமாப்
போதிப்பது எவர் ஐயனே?

சாதித்த சாதனமும் யோகியர்கள் நமதென்று
சங்கிப்பர் ஆதலாலே
தன்னிலே தானாய் அயர்ந்துவிடு வோம் எனத்
தனிஇருந் திடின் அங்ஙனே

சோதிக்க மனமாயை தனைஏவி னால் அடிமை
சுகமாவது எப்படிசொலாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே!. 9.

10.அண்ட முடி தன்னிலோ, பகிரண்டம் அதனிலோ,
அலரிமண் டலநடுவிலோ,
அனல்நடுவி லோ, அமிர்த மதநடுவி லோ,அன்பர்
அகம் உருகி மலர்கள்தூவித்

தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ, திக்குத்
திகந்தத்தி லோ, வெளியிலோ,
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ, வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ,

கண்டபல பொருளிலோ, காணாத நிலை எனக்
கண்டசூ னியமதனிலோ,
காலம் ஒரு மூன்றிலோ, பிறவிநிலை தன்னிலோ,
கருவிகர ணங்கள் ஓய்ந்த

தொண்டர்கள் இடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற்கு உளவுபுகலாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. 10.

11.எந்தநாள் கருணைக் குரித்தாகும் நாள் எனவும்
என் இதயம் எனைவாட்டுதே.
ஏதுஎன்று சொல்லுவேன் முன்னொடுபின் மலைவுஅறவும்
இற்றைவரை யாதுபெற்றேன்?

பந்தமா னதில் இட்ட மெழுகாகி உள்ளம்
பதைத்துப் பதைத்து உருகவோ?
பரமசுகம் ஆவது பொறுப்புஅ ரிய துயரமாய்ப்
பலகாலும் மூர்ச்சிப்பதோ?

சிந்தையா னதும் அறிவை, என் அறிவில் அறிவுஆன
தெய்வம்நீ அன்றி உளதோ?
தேகம் நிலை அல்லவே உடைகப்பல் கப்பலாய்த்
திரைஆழி ஊடுசெலுமோ?
சொந்தமாய் ஆண்டநீ அறியார்கள் போலவே
துன்பத்தில் ஆழ்த்தல் முறையோ?
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. 11.

12எந்நாளும் உடலிலே உயிராம் உனைப்போல்
இருக்க இலை யோ? மனதுஎனும்
யானும் என் நட்பாம் பிராணனும் எமைச்சடமது
என்றுஉனைச் சித்து என்றுமே

அந்நாளில் எவனோ பிரித்தான். அதைக்கேட்ட
அன்றுமுதல் இன்றுவரையும்
அநியாய மாய் எமை அடக்கிக் குறுக்கே
அடர்ந்து அரசு பண்ணி, எங்கள்

முன்னாக நீஎன்ன கோட்டைகொண் டாய் என்று
மூடமனம் மிகவும்ஏச
மூண்டு எரியும் அனல் இட்ட மெழுகாய் உளங்கருகல்
முறைமையோ? பதினாயிரம்

சொன்னாலும் நின்அருள் இரங்கவிலை யேஇனிச்
சுகம்வருவது எப்படிசொலாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. 12.

## வேதாத்திரியாரின் "இன்ப ஊற்று" பாடல்கள்

1.இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - எங்கும்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா
அன்பும் கருணையுமாய் அனைத்து உயிர்களுடும்
இன்ப ஊற்றாய் அறிவாய் இயங்கும் பராபரமே. (ஞா.க.பா.1646-1)

2.எழிலுலகம் படைத்து எல்லா உயிர்களுக்கும்
வழிவழியாக வாழ வாய்ப்பை நிரப்பி வைத்து
ஒழிவிலாத் தொடராக உள்ளும் புறமும் ஊற்றாய்
அழிவிலாப் பேரின்ப அறிவலையாய்த் திகழும், (ஞா.க.பா.1646-2)

3.உண்மை நிலை மறந்து உணர்வு தன்முனைப்பாகி
எண்ணம் 'தான்' 'தனது' என்று இறுகிக் குறுகி நின்று
மண்ணைப் பொன்னை மென்மேலும் மாறிமாறி நினைந்து
கண்ணும் கருத்தும் தீய காமம் புகாமல் என்னுள் (ஞா.க.பா.1646-3)

4.உடலாய் எனை நினைந்தேன் உணர்ச்சிகள் வருந்தின
உடலுள் உயிராய் என்னை உயர்ந்து அறிவில் நிறைந்தேன்
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள்நான் அடங்க(ஞா.க.பா.1646-4)

5. வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே
எனை மறந்தேன் என்றன் வினை மறந்தேன் இறைவா !
எனை மறந்தேன் ஆனால் நீ உள் நிறைந்து எனை மீட்டு.(ஞாக. பா.1646-5) -
வேதாத்திரி மகரிஷி

# பேரின்ப ஊற்று -

1.இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - எங்கும்
இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!
அன்பு ஊற்றாய்ப் பெருகி அனைத்துயிர்க்குள்ளும் அறிவாய்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா (ஞா.க.பா.1648-1)

2.உணர்ச்சியாய்ச் சிந்தனையாய் உள்ளதே அறிவென்று,
உணர்ந்திருந்தேன் பலநாள், மேலும் உண்மை விளங்க
உணர்ச்சிக்கு முன்னம் விண்ணில் ஒழுங்காற்றலாய் விளங்கும்,
உனது திருநிலையும் அறிவே என உணர்ந்தேன். (ஞா.க.பா.1648-2)

3.ஆதிநிலை வெளியில், அறிவும் விரைவுமாக
அடங்கியுள்ள தன்மையே அணுமுதல் அனைத்துக்குள்ளும்
நீதி ஒழுங்கமைப்பாய், நேர்முகக் காட்சிகளாய்,
நிறைந்த திருவருளை நினைக்க நினைக்க என்னுள் (ஞா.க.பா.1648-3)

4.பரம அணு முதலாய்ப் பார். விண்மீன் அனைத்தும்,
பம்பரம் போல் சுழன்று, மிதந்துருண்டு உன்னில்
தரம் அறிவே என்னும் தத்துவம் உணர்ந்திட்டேன்!
தற்பரனாக, உன்னை என்னுள் உணரப்பெற்றேன்! (ஞா.க.பா.1648-4)

5.உன்னிலே நானடங்க என்னுளே நீ விளங்க
உனது தன்மை ஒளிர எனதுள்ளம் தூய்மை பெற்றேன்
இன்னும் வேறென்ன வேண்டும் இப்பேறு பெற்ற பின்னர்
எடுத்த மனித பிறப்பு எய்தியது முழுமை.(ஞாக. பா.1648-5)
- வேதாத்திரி மகரிஷி